| | | |
|---|---|---|
| O.S No. | : | 215/2021 |
| DATE | : | 12.03.2026 |
| பெயர் | : | கலந்தர் |
| தந்தை பெயர் | : | அமீர் |

**பிரதிவாதி தரப்பு வா.சா.2 குறுக்கு விசாரணை**

1. இந்த வழக்கில் வாதி தனது கணவர் அப்துர் ரகுமான் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார். பிரதிவாதி வந்தவாசியை சேர்ந்தவர். வந்தவாசியில் எத்தனை ஜமாது உள்ளது என்ற விவரம் தெரியாது. வந்தவாசியில் பிரதிவாதி காதர்ஜண்டா தெருவிற்கு பக்கத்தில் உள்ள பள்ளிவாசல் உள்ளது அந்த ஜமாதை சேர்ந்தவர். எந்த ஜமாதில் இருந்து திருமணத்திற்கு அனுமதி வாங்கினார்கள் என்றால் ஜமாதின் பெயர் ஞுபாகத்தில் இல்லை. திருமணம் ஏகனாம்பேட்டை ஜமாதில் நடந்தது. திருமணத்திற்கு பிரதிவாதியின் தந்தை வந்தார், நான் பார்த்தேன். 10 லட்சம் திருமணத்திற்கு செலவு செய்தார்கள் என்று சொல்லப்பட்டுள்ளது அது என்ன நகைகள், என்ன சீர்வரிசை பொருட்கள் என்ற விவரம் குறிப்பாக தெரியாது, ரூ. 10 லட்சம் செலவு செய்தார்கள் என்ற விவரம் தெரியும். என்னென்ன பொருட்களுக்கு என்ன கணக்கு எழுதினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது.

2. திருமணத்திற்கு பின்பு வலிமா பிரதிவாதி வீட்டில் நடந்தது. அதற்கான செலவை பிரதிவாதி தான் செய்தார். எவ்வளவு செலவு செய்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது, பொதுவாக எதிர்விருந்திற்கு 10 ல் இருந்து 11 பேர்கள் தான் செல்வார்கள். எனது பிரமாண வாக்குமூலத்தில் பிரதிவாதி வாதியை துன்புறுத்தினார் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் அதற்கான ஆதாரம் உள்ளது. வரதட்சனை கேட்டு பிரதிவாதி வாதியை கொடுமைப்படுத்தியதாக சொல்லியுள்ளேன் அதற்கு ஆதாரம் உள்ளதா என்றால் எங்கள் தரப்பில் இருந்து எந்த புகாரும் கொடுக்கவில்லை. வாதி பிரதிவாதி மீது 2016ல் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் நான் சொல்லி தான் கொடுத்தார். விசாரணைக்கு நான் செல்லவில்லை, பின்னர் சாட்சி தானாகவே முன்வந்து தான் காவல் துறையில் உதவி ஆய்வராளராக இருந்ததால் அந்த விசாரணைக்கு செல்ல

முடியவில்லை என்று கூறினார். விசாரணைக்கு நான் செல்லாத போது விசாரணையில் என்ன நடந்தது என்ற விவரம் எனக்கு தெரியும்.

3. விசாரணையின் போது வாதிக்கு கொடுத்த பொருட்களை அவர் வாங்கி வந்துவிட்டார். பின்னர் சாட்சி தானாகவே முன்வந்து இரண்டரை சவரன் நகை கொடுக்கவில்லை என்றும் அவரிடம் இல்லை என்றும் தெரிந்து கொண்டேன் என்று கூறினார். விசாரணையில் சீர்வரிசை பொருட்கள் மற்றும் அனைத்து தங்க நகைகளையும் 2016லேயே வாங்கி சென்றுவிட்டார்கள் 2 ½ சவரன் மீதம் உள்ளது என்று நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. சனாவுல்லா சீர்வரிசை பொருட்களை வாதி சார்பாக அவர் முன்னிலையில் வாங்கினார், அவர் எனது மைத்துனர்.

4. 2014ல் இருந்து வாதியும் பிரதிவாதியும் சேர்ந்து வாழவில்லை. எனது பிரமாண வாக்குமூலத்தில் 2021ம் ஆண்டு வாதி தனது தாயார் வீட்டிற்கு வந்துவிட்டார் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்டுள்ளது. ஜமாத்தில் வைத்து பஞ்சாயத்து செய்யப்பட்டது. ஜமாத்தில் நான் எந்த கையெழுத்தும் போடவில்லை, ஆனால் கலந்து கொண்டேன். பிரதிவாதியின் தாயார் எந்த வருடம் இறந்தார் என்று எனக்கு தெரியாது. பிரமாண வாக்குமூலத்தில் பிரதிவாதி குடித்து பிரச்சனை செய்வார் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் அது சம்மந்தமாக எப்போது, என்று, எந்த காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் புகார் எதுவும் கொடுக்கப்படவில்லை.

5. 10.08.2021 அன்று இந்த தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நான் தான் வழக்கு தாக்கல் செய்ய சொல்லி வாதிக்கு அறிவுரை அளித்தேன் என்று சொன்னால் சரியல்ல. வாதி தான் பிரதிவாதியுடன் வாழ்க்கை நடத்தாமல் வந்துவிட்டார், நான் வாதிக்கு சாதகமாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக் கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை – இல்லை.**

FANNY RAJAN

Principal District Munsif, Kancheepuram
Digitally signed by FANNY RAJAN
Date: 2026.03.12 19:16:02 +0530